மாண்புமிகு முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைய தொழில் அதிபர்களை அழைத்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென்று எனக்கு ஆணையிட்டு இருக்கிறார்கள். அப்படி வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் சீனியம்மாளுடைய கோரிக்கையை கவனத்திலே எடுத்துக்கொண்டு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 52, திரு. ம. தனபால், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

52—

சத்துணவு அமைப்பாளர் பணிக்கு வயது வரம்பை தளர்த்துதல்.

*19333—திரு. ம. தனபால்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் பணியில் சேருவதற்கான குறைந்தபட்ச வயது வரம்பிற்கும் மற்ற பணியிடத்திற்கான வயது வரம்பிற்கும் வித்தியாசம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குறைந்தபட்ச வயது வரம்பை தளர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) வயது வரம்பைத் தளர்த்துவதற்கு அரசு முன்வராது.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் பணிக்கான வயது வரம்பு குறைந்தபட்சம் 26 இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதேபோன்று சத்துணவு அமைப்பாளர் பணிக்கு 18 வயது என்று இருக்கிறது என்று நினைக்கிறேன். இதிலே ஒரு வித்தியாசம் இருப்பது மட்டுமல்லாமல் பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் என்று சொல்கின்றபோது அதற்கு 26 வயது முடிந்தால்தான் அந்தப் பணியிலே சேர முடியும் என்று இருப்பதால், அதிலும் இன்னொரு பெண்தான் அப்பணிக்குச் சேரத் தகுதி

உடையவர் என்று தற்சமயம் உத்திரவு இருப்பதாக நான் அறிகின்றேன். உயர்நிலைப்பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள், நடுநிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள்—இவர்களுக்கெல்லாம் அங்கே பெண்கள் சத்துணவு அமைப்பாளராக இருக்கின்றபோது நடைமுறையிலே சில சிக்கல்கள் எல்லாம்கூட ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றது. எனவே, இவ்விவரத்தை எல்லாம் ஆய்ந்து அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கக்கூடிய தாய்க்குத்தான் குழந்தைகளுடைய வளர்ப்பு முறையைப் பற்றி அதிகமாகத் தெரியும் என்கிற காரணத்தால், தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் பெண்களையே அந்தப் பணிகளில் நியமிக்க வேண்டுமென்று உத்தர விட்டு இருக்கிறார்கள். வயது வரம்புப் பள்ளி சத்துணவு அமைப்பாளர்களுக்கு 25 என்று இருக்கிறது. ஏனென்றால் மிகுந்த பொறுமையோடும், நிதானத்தோடும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டிய வயது அந்த வயதாக தான் இருக்க முடியும் என்கிற காரணத்தால் கூடுதலான வயதை வைத்திருக்கிறோம். மற்ற அரசுப்பணிகள் என்றால் அவர்கள் கோப்புகளைக் கையாளுகிறார்கள். கோப்புகளைக் கையாளுவது சுலபம். ஆனால் குழந்தைகளைக் கையாளுவது கடினம் என்கிற காரணத்தால் 25 வயது தான் பொருத்தமான வயது என்கிற அடிப்படையில் அந்த வயது வரம்பை வைத்திருக்கிறோம். உடல் ஊனமுற்றோருக்கும், மலைவாழ் பகுதிகளில் இருக்கிற சத்துணவுப் பணியாளர்களுக்கும் வயது வரம்பைத் தளர்த்தி அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகள் என்று சொன்னார்கள். சத்துணவு பாலவாடிப் பள்ளியில் பயில்கிற குழந்தைகள், உயர்நிலைப்பள்ளிகளில் பயில்கின்றவர்கள் மாணவப் பருவத்தில் இருப்பவர்கள், அதிலும் கிட்டத்தட்ட 5, 6 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பவர்கள், அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களைக் குழந்தைகள் என்று சொல்வது சரியானதாக இருக்குமா ? எனவே, அரசு இதனை மீண்டும் மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 25 வயதானாலும் தாய்க்குக் குழந்தை தான். ஆகவே, 15 வயது வரையில், குழந்தைகள் என்று தான் அழைக்கப்படுவார்கள். அந்த வகையில்

அந்தக் குழந்தைகளை கவனிக்கின்ற பொறுப்பைப் பெண்களிடத்தில் ஒப்படைத்தால் தான் சிறப்பாக இருக்கும் என்கிற அடிப்படையில், பெண்கள் மீது மிகுந்த அன்பையும், பாசத்தையும் வைத்திருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அவ்வாறு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 53, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

திருமண உதவித் தொகையை அதிகரித்தல்.

53—

*23172—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அளிக்கும் திருமண உதவித் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் 25 மாநிலங்கள் இருக்கின்றன. அவற்றில் சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்யப்படுகிற ஒரே ஒரு மாநிலம், நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி செய்கிற இந்தப் புனித பூமியில் தாய்மார்களுக்கு அளிக்கப்படுகிற திருமண உதவித் தொகை அதிகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களை அளித்து வருகிறோம்.

மூவாலூர் இராமாமிர்தம் திட்டம்.
தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்.
விதவை மகள் திருமண உதவித் திட்டம்.
விதவை மறுமண உதவித் திட்டம்.
ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்.